செ.வெ.எண்:67 நாள்:28.12.2017

# பத்திரிக்கைச் செய்தி

**திருநெல்வேலி மாவட்டத்தில் பெண்களின் முன்னேற்றத்திற்காக சிறந்த சேவை புரிந்த பெண்மணிக்கு 2017-2018ம் ஆண்டிற்கான ஒளவையார் விருது வழங்க விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன. இவ்விருது 08.03.2018அன்று உலக மகளிர் தினவிழா கொண்டாடும் நாளன்று வழங்கப்படும். இவ்விருதுக்கு ரொக்கப்பரிசு மற்றும் தங்கபதக்கம், தகுதியுரை மற்றும் சால்வை வழங்கப்படும். ஒளவையார் விருது மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் வழங்கப்படும். 2017 -2018 ஆம் ஆண்டிற்கான விருது பெற தகுதியானவர்களைத் தெரிவு செய்வதற்கான விண்ணப்பங்கள் மற்றும் அவை தொடர்பான ஆவணங்களுடன் வரவேற்கப்படுகின்றன. விருது பெற விண்ணப்பிப்பவர்கள் அதற்கான உரிய படிவத்தினை திருநெல்வேலி மாவட்ட ஆட்சியர் வளாகத்தில் உள்ள மாவட்ட சமூக நல அலுவலகத்தில் பெற்று பூர்த்தி செய்த படிவத்தினை வருகிற 03.01.2018-க்குள் சமர்ப்பித்து பயன்பெறுமாறு கேட்டுக்கொள்கிறேன்.**

விதிமுறைகள்:

1. தமிழ்நாட்டை பிறப்பிடமாக கொண்டவராக வயது 18க்கு மேல் இருக்கவேண்டும்.
2. சமூகநலன் சார்ந்த நடவடிக்கைகளில் பெண்குலத்திற்கு பெருமை சேர்க்கும் வகையிலான மொழி, இனம், பண்பாடு, கலை, அறிவியல், நிர்வாகம் போன்ற துறைகளில் மேன்மையாக பணிபுரிந்து மக்களுக்கு தொடர்ந்து பணியாற்றுதல்.
3. விண்ணப்பம் தமிழ் (வானவில் அவ்வையார்.) மற்றும் ஆங்கிலத்தில் மூன்று நகல்களில் சமர்ப்பிக்க வேண்டும்.
4. விண்ணப்பதாரர் பெண்களின் முன்னேற்றத்திற்காக சிறப்பாக சேவை புரிந்த விவரம் 1 பக்க அளவில் இருத்தல் வேண்டும்.

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம் திருநெல்வேலி.